**O.S No. 35/2013 17.09.2021 PW1 - மகாலிங்கம்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கை உங்கள் அப்பா தான் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால்சரிதான். உங்கள் தந்தை மாடு,ஆடு மேய்த்துக்கொண்டு தோட்டத்திற்கு சென்று வருவார் என்று சொன்னால் வயதாகிவிட்டதால் எப்போதாவது போவார். உங்கள் தந்தை ஆரோக்கியமாக இருக்கிறார் என்றும் அவர் வந்து சாட்சியம் அளித்தால் உண்மை வெளிப்பட்டுவிடும்என்றும் சொன்னால் அதனால் நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களது தந்தை வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்தை விபரத்தை காலியிடம் என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல சுற்றி வேலியிடப்பட்டு தகரசெட்டு போடப்பட்டுள்ளது. நீங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வீரணப்மூப்பர் என்பவருக்கு பெத்தனமூப்பர் ராமன் மூப்பர் மகாலிங்க மூப்பர் என சொல்லியுள்ள விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றுசொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி 3நபர்களும் தங்களுக்கு பாகம் பிரித்துகொண்டு அதில் பெத்தனமூப்பருக்கு தாவா சொத்து பாகமாக கிடைத்து அனுபவித்துவந்தார் என்று முதல்விசாரணையில் சொல்லியுள்ளதை பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால்சரியல்ல. பெத்தனமூப்பருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது இரண்டு மகன்களான மதியாபுலி, ராமன் ஆகிய இரண்டு பேர்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்பதையும் பிராதில் சொல்லவில்லைஎன்று சொன்னால் சரியல்ல. ராமன் தனது பாகத்தை மதியாபுலிக்கு பாகவிடுதலை செய்துகொடுத்தார் என்பதையும் பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாகவிடுதலைக்கு பின்பு தாவா சொத்தானது பெத்தனமூப்பருக்கு பாத்தியப்பட்டது என்ற பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் கீழமேல் மற்றும் தென்வடல் அளவு 24X24 ஆகும் என்று சொன்னால் சரிதான். தாவாயிடம் வீரணமூப்பருக்கு தாவாயிடம் ஆதியில் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வீரணமூப்பருக்கு மூன்று மகன்கள் அவர்களது பெயர் பெத்தனமூப்பர், ராமமூப்பர், மகாலிங்க மூப்பர் என்று சொன்னால் சரிதான். பெத்த மூப்பருக்கு ராமன், மதியாபுலி என்ற இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். ராமமூப்பருக்கு பால்ராஜ் மற்றும் மதியாபுலி இரண்டு மகன்கள் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ராமமூப்பர் மற்றும் மகாலிங்க மூப்பரும் எங்குள்ளார் என்றால் 25வருடத்திற்கு முன்பு வண்ணிவேலம்பட்டிக்கு சென்றுவிட்டார்கள். மகாலிங்க மூப்பர் வாரிசு விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகாலிங்கமூப்பரின் வாரிசுகள் உள்ளார்கள் என்றும் உங்கள் ஊருக்கு வந்து செல்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. வீரணமூப்பர் இறந்தபின்பு அவரது மகன்கள் பெத்தன மூப்பர் ராமமூப்பர் மகாலிங்கமூப்பர் தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தனர் என்று சொன்னால் சரியல்ல. வீரணமூப்பர் மகன்கள் மூன்று பேரும் தாவா சொத்தை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றுசொன்னால் சரிதான் சாட்சி பின்பு மாற்றி தாவா சொத்தை பிரிக்கவில்லை என்று கூறுகிறார். 3பேரும் தாவாசொத்தை பிரித்துக்கொண்டார்கள் என்றும் அதில் வடக்கு பகுதி பெத்தனமூப்பருக்கும், மையப்பகுதி ராமமூப்பருக்கும் தென்பகுதி மகாலிங்க மூப்பருக்கும் பாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால்சரியல்ல. நீங்கள் பெத்தனமூப்பரின் இளையமகன் மதியாபுலியிடம் கிரையம் வாங்யுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். பெத்தனமூப்பரின் இரண்டு மகன்களில் ஒரு மகனான ராமன் என்பவரிடமிருந்து ஏன் கிரையம் வாங்கவில்லை என்று

சொன்னால் பெத்தனமூப்பர் இரண்டு மகன்களின் ஒரு மகனுக்கு தானசெட்டில்மென்ட எழுதிக்கொடுத்துவிட்டதால் நாங்கள் அவரிடம் கிரையம் வாங்கவில்லை. நீங்கள் தாக்கல்செய்த வழக்குரையில் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த விபரம்பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் முதல்விசாரணையில் தானப்பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம் என்று சொல்லவில்லை என்றும் ராமன் இடமிருந்து விடுதலை வாங்கியதால் மதியாபுலியிடம் கிரையம்பெற்றதாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல்விசாரணையில் குற்ற எண். 139/2011 என்ற வழக்கு இருக்கும் விபரத்தை வழக்குரையில் சொல்லிவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பிராதில் வீடு கட்டி குடியிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு முதல்விசாரணையில் ஆடு, மாடு கட்டிதான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் ஆடு மாடு கட்டிதான்அனுபவித்து வருகிறேன். 4ம் பிரதிவாதி ஆறுமுகம் தகர செட்டு போட்டு தாவாசொத்தில் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் இல்லை. தற்போது தாவாயிடம் காலியிடமாக உள்ளது என்று சொன்னால் ஆடு மாடு கட்டி செட்டு போட்டுள்ளோம். தாவா இடத்தில் செட்டு எதுவும்போடவில்லை என்றும் வேலிஅடைக்கவில்லை என்றும் பிரதிவாதியின் தகரசெட்டை தவிர மற்ற இடங்கள் காலியாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மதியாபுலியிடமிருந்து தாவா சொத்தின் வடபகுதியை தான் காலியிடமாக அனுபவித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ஆறுமுகம் மையப்பகுதியும் கிரையம்வாங்கியுள்ளார் என்றுசொன்னால் சரியல்ல. ராமமூப்பரின் வாரிசுகளான 1,2 பிரதிவாதிகளிடமிருந்து இந்த 4ம் பிரதிவாதி தாவா சொத்தின் மையப்பகுதியை 04.02.2013ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் வாங்கவில்லை. மீதமுள்ள தென் பகுதியை மகாலிங்க மூப்பர் வகையராவே வைத்துள்ளார்என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தந்தை வழக்கு போட்டபின்பு தான் எல்லா சொத்துக்களையும்உள்ளடக்கி கிரையம் வாங்கியது பிரதிவாதிகளுக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. 3வாரிசுகளில் 2 வாரிசுகள் வெளியூரில் இருந்ததை தனக்கு சாதகமாக பயன்படுத்தி உங்களுடைய தந்தையும் மதியாபுலியும் கிரையப்பத்திரம் உற்பத்தி செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரையப்பத்திரத்தில் எல்லா சொத்துக்களையும் சேர்த்திருந்தாலும் வடப்பகுதியை மட்டும்தான் நீங்கள் அனுபவம் செய்துவருகிறீர்கள்என்று சொன்னால்சரியல்ல. மற்ற பகுதிகளை பொருத்து இந்த கிரையப்பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தற்போதுவரை மையப்பகுதியை அனுபவித்துவருகிறார் என்று சொன்னால் நாங்கள்தான் அனுபவித்துவருகிறோம். தானப்பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தானப்பத்திரத்தில் சொத்து விபரம் தவறாக இருப்பதால் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. தானப்பத்திரத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்பதால்தான் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வாங்கும்போது மொத்தமாக பரிவினை இல்லாத சர்வே எண்ணின் 42சென்டை காண்பித்து அதற்குள் இந்த தாவாசொத்தை வாங்கியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பத்திரத்தை பார்த்துதான் வாங்கினோம். நீங்கள் கிரையம் வாங்கும்போது தாவாசொத்து உட்பிரிவு செய்யப்பட்டு மதியாபுலிபேரில் தனிப்பட்டா 576சதுரடிக்கு ஏற்பட்டுருந்தது என்று சொன்னால்சரிதான். மதியாபுலிபேரில் தனிப்பட்டா எப்போதும் ஏற்பட்டது இல்லை என்றும் 42 சென்டுக்கு 63பேருக்கு

கூட்டுப்பட்டா இன்று வரை இருந்துவருகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி கூட்டுப்பட்டாவில் உங்கள் தந்தைபெயரும் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ3ல் 4ம்பிரதிவாதி ராமன் மகன் ஆறுமுகம் பெயரும் உள்ளது என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே உங்கள்கிரையதாரர் தனியாக அனுபவித்திருந்தால் அவரது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டிற்கும் என்று சொன்னால்சரியல்ல. நீங்கள் உங்கள் தந்தை பெயரில் கிரையம் பெற்று அனுபவித்திருந்தால் தனிப்பட்டா உங்கள் தந்தைபெயருக்கு ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒருபகுதியை 4ம் பிரதிவாதி அனுபவித்து வருவதால்தான் வாசாஆ3ல் 4ம் பிரதிவாதி பெயர் உள்ளது என்றுசொன்னால் சரியல்ல. நீங்கள் தனிப்பட்டாகேட்டு முயற்சி செய்துள்ளீர்களா என்றுசொன்னால் செய்துள்ளேன். 4ம்பிரதிவாதி பெயரை பட்டாவிலிருந்து நீக்க கோரி மனு எதுவும் கொடுத்து நடவடிக்கைஎடுக்கவில்லை என்றுசொன்னால் பட்டா கொடுக்ககூடாது என்று மனு கொடுத்துள்ளேன். நீங்கள் மனு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல கிராம நிர்வாக அதிகாரியிடம் நேரடியாக கொடுத்துள்ளேன். கிரையதாரர்களின் பெயரிலும் அவர்களது முன்னோர்கள்பெயரிலும் தாவாசொத்திற்கு இன்று வரை கூட்டுபட்டா உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. உங்களது கிரையதாரர் மதியாபுலிபேரில் எந்த ஒரு மூலபத்திரமோ அல்லது பட்டாவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல பட்டா உள்ளது. வாசாஆ1ல் மதியாபுலி என் தந்தையின் தானபத்திரத்தின் படி என தவறாக சொல்லியுள்ளார் என்றும் அதனால்தான் தானப்பத்திரத்தை நீங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. தாவாசொத்து அல்லாத வேறு ஒரு இடத்தில் நீங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறீர்கள் என்று சொன்னால்சரிதான். நீங்கள் தாக்கல் செய்திருக்கும் வாசாஆ2ல் வேறுவீட்டிற்கான ரசீது என்றும் தாவாசொத்தின் வீடே இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ4 சட்டப்படியான ஆவணம் என்றும் அதுசம்பந்தமாக நீங்கள் எந்த கேள்வியும் எழுப்பமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும் அதனால் வழக்கு பரிகாரம் உங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d./ Mahalingam
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.